**MCOP NO: 1300/2024** **DATE: 09.04.2026**

ம.சா : 1

பெயர் : திருமதி.திலகம்

க/பெ : திரு.கோதண்டம்

வயது : 61

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 14 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் கணவர் தான் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி தவறான பாதையில் சென்று 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு எதுவும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நானும், 2ம் மனுதாரரும் தனிதனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 2ம் மனுதாரர் சுசீலாவிற்கு திருமணம் ஆகி தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். என் கணவர் விபத்தின் போது பால் வியாபாரம் செய்து மாதம் ரூ.40,000/- சம்பாதித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது என்னுடைய கணவரின் அஜாக்கிரதையால் நடந்ததால் இந்த மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.